சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலன் – 2023-2024 - ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - பயிர் சாகுபடி விவரங்களை கிராம வாரியாக சேகரித்து, கணினிமயமாக்கி புதிய இணையதளமான 'GRAINS' Portal (Grower Online Registration of Agriculture Inputs System) என்ற இயங்குதளம் அறிமுகப்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வே.உ_2) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, சித்திரை மாதம் 13-ம் நாள்

அரசாணை (டி) எண்.90 நாள்.26.04.2023

படிக்கப்பட்டது:

வேளாண்மை இயக்குநரின் கடித எண். த.தொ /8/ 6813 / 2023, நாள் 31.03.2023.

---

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கடந்த 21.03.2023 அன்று தாக்கல் செய்த 2023-2024-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், புதிய இணையதளமான 'GRAINS' (Grower Online Registration of Agriculture Inputs System) குறித்து பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

"உழவர் நலன் சார்ந்த பல்வேறு துறைகளின் திட்டப்பலன்களை விவசாயிகள் பெறுவதற்கு, சம்பந்தப்பட்ட துறை அலுவலகத்திற்கு சென்று, பல்வேறு ஆவணங்களை தனித்தனி படிவங்களில் தரவேண்டியுள்ளது. இத்தகைய நடைமுறைகளை எளிதாக்கும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள நில உரிமையாளர், சாகுபடி செய்யும் விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளின் அடிப்படை தகவல்களான வங்கிக் கணக்கு, ஆதார் எண், நில விவரங்கள், பயிர் சாகுபடி விவரங்களை கிராம வாரியாக சேகரித்து, கணினிமயமாக்கி புதிய இணையதளமான

(த.பி.பா)

'GRAINS' (Grower Online Registration of Agriculture Inputs System) அறிமுகப்படுத்தப்படும். இதனால் விவசாயிகளுக்கு ஒரே தளத்தில் எல்லா பயன்களும் (One Stop Solution) கிடைக்கும். இதன் மூலம், பயிர்க்கடன், நெல், கரும்புக்கான ஊக்கத்தொகை, இயற்கைப் பேரிடர் நிவாரணம், நலத்திட்ட உதவிகள், வேளாண்மை சார்ந்த 13 க்கும் மேற்பட்ட துறைகளின் பல்வேறு திட்டப் பலன்கள் அனைத்தையும் விவசாயிகள் எளிதாகப் பெறும் வகையில் இந்த இணையதளம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இது விவசாயிகளுக்கும் அரசின் பல துறைகளுக்கும் பெரும் உதவியாக இருக்கும்."

2. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்துதல் தொடர்பாக, வேளாண்மை இயக்குநர் பார்வையில் படிக்கப்பட்ட தனது 31.03.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் கருத்துருவினை அனுப்பியுள்ளார்:-

வேளாண்மை - உழவர் நலத் துறையானது, 2010-2011 ஆம் ஆண்டு முதல் வேளாண்மையில் தகவல் தொழில் நுட்பத்தை உட்புகுத்தி விவசாயிகளுக்கான அனைத்து சேவைகளையும் இலகுவான முறையில் வழங்கி வருகிறது. மேலும், வேளாண்மைத் துறை மட்டுமல்லாது, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அரசுத் துறைகள், விவசாயிகளின் வாழ்வு செழிக்க பல்வேறு சேவைகளை வழங்கி நாட்டின் முதுகெலும்பாக திகழும் விவசாயத்தையும், விவசாயிகளையும் காத்து வருகிறது. தற்போதைய சூழலில் விவசாயிகள் தங்களுக்கு தேவையான சேவைகளை இந்த துறைகளில் இருந்து பெற, பெயர் முன்பதிவு செய்து துறைக்கு தேவையான ஆவணங்களை தனியே சமர்ப்பிக்க வேண்டி உள்ளது. இந்த நடைமுறையானது விவசாயிகளுக்கு பெரும் சவாலாக உள்ளதோடு திட்டப் பலன்களை பெறவும் கால விரயம் ஏற்படுகிறது.

இதற்குத் தீர்வு காணும் பொருட்டு, "GRAINS" (Grower Online Registration of Agriculture Inputs System) Portal- இயங்குதளம் உருவாக்கப்பட உள்ளது. இதில், முதற்கட்டமாக விவசாயிகளின் தரவுகளை வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டி உள்ளது. அதன் தொடர்ச்சியாக, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான சேவைகளை இந்த தரவுதளத்தில் பதிவு செய்துள்ள தகவல்களை வைத்தே பெற இயலும். அதோடு, அரசின் அனைத்துத் துறைகளும் சரியான பயனாளியை கண்டறிந்து அவர்களுக்கான திட்டங்களை துரிதமாக செயல்படுத்திட ஏதுவாக GRAINS இயங்குதளம் அமையும்.

அரசின் நலத்திட்டங்கள் தகுதி வாய்ந்த பயனாளிக்கு சென்றடைவதை உறுதிபடுத்திட கீழ்க்காணும் மூன்று இனங்களும் இன்றியமையாதது ஆகும்.

1. நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவரம்
2. நில உடைமை வாரியாக புவியிடக் குறியீடு (Geo tagging) செய்தல்
3. நில உடைமை வாரியாக சாகுபடி பயிர் விவரம்

**1. நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவரம்:**

GRAINS இயங்குதளத்தினை உருவாக்க, முதற்கட்டமாக நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகளின் தரவுத்தளம் உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

**2. நில உடைமை வாரியாக புவியிடக் குறியீடு (Geo Tagging) செய்தல்:**

தமிழ்நாட்டில் உள்ள 16,721 கிராமங்களில் உள்ளஅனைத்து புல எண்களும் புவியிடக் குறியீடு செய்திட வழிவகை செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புவியிடக் குறியீடு செய்த புல எண்ணில், நிலம், நில உரிமையாளர் பற்றிய அனைத்து விவரங்களும் சேர்க்கப்பட்டு, ஒற்றைச் சாளர முறையில் ஒரே இடத்தில் கண்காணிக்க ஏதுவாக தரவுத்தளம் உருவாக்கப்பட உள்ளது.

**3. நில உடைமை வாரியாக சாகுபடி பயிர் விவரம்:**

புவியிடக் குறியீடு செய்யப்பட்ட புல எண்ணில் சாகுபடி செய்துள்ள பயிர், பரப்பு விபரங்களை நிகழ்நிலை அடிப்படையில் பதிவு செய்திட செயலி ஒன்றை உருவாக்கி, நடப்புக் குறுவை பருவத்தில் செயலியை செயல்பாட்டுக்கு கொண்டு வர துரிதமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறிய மூன்று இனங்களின் தரவுகளையும் GRAINS இயங்குதளம் இணைத்து, தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு பலன்கள் சென்று சேர்வதை உறுதி செய்கிறது.

GRAINS என்பது விவசாயிகளின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கி இயங்க உள்ளது. அதாவது விவசாயிகளின் தனிப்பட்ட விவரங்கள் (விவசாயியினுடைய பெயர், தந்தையார் பெயர், ஆதார் எண், கைபேசி எண், பாலினம், சமூக நிலை, இருப்பிட முகவரி), நில விவரங்கள் (புல எண், உட்பிரிவு எண், பரப்பு, நில முகவரி) வங்கி விவரங்கள் (வங்கிக்

கணக்கு எண், IFSC எண்), பயிர் விவரங்கள் (சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர், சாகுபடிப் பரப்பு, நீர்ப்பாசன விவரங்கள்) போன்ற அடிப்படை விவரங்களை உள்ளடக்கிய இயங்குதளம் ஆகும்.

GRAINS இயங்குதளத்தால் பெறப்படும் நன்மைகள் பின்வருமாறு:-

- ஒற்றைசாளர (Single Window Portal) வலைதளமாக செயல்படுவதால், விவசாயிகள் அனைத்து பயன்களுக்கும் ஒரே இடத்தில் பதிவுசெய்து அரசின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
- ஒவ்வொரு முறையும் திட்டப் பலன்களை பெறுவதற்கு, விவசாயிகள் விண்ணப்பிக்கும்போது, ஆவணங்கள் தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டியதில்லை.
- ஏதேனும் ஒரு திட்டத்தில் வழங்கப்படும் சேவைகளுக்கு கூடுதல் விவரங்கள் தேவைப்படுமாயின், அது மட்டுமே சம்பந்தப்பட்ட துறையால் சேகரிக்கப்படும்.
- அரசின் நன்மைகள் சரியான பயனாளிக்கு சென்றடைவதை உறுதிப்படுத்திட முடியும்.
- விவசாயிகள் இதுவரை அரசிடமிருந்து பெற்ற நன்மைகளை தெரிந்துகொள்ளலாம்.
- விவசாயிகள் நேரடியாக வலைதளத்தில் பதிவுசெய்வதால், முன்னுரிமை அடிப்படையில், அரசின் பயன்களை பெற்றுக் கொள்ளலாம்.
- வேளாண் சார்ந்த அனைத்து துறைகளும் விவசாயிகளின் அடிப்படை விவரங்கள், பயிர்விவரங்களை தெரிந்து கொண்டு அதற்கேற்ப பயன்களை அளிக்க முடியும்.
- ஆதார்எண் அடிப்படையில், வங்கிக் கணக்கிற்கு நேரடிப் பணப்பரிமாற்றம் மூலம் நிதித்திட்டப்பலன் அனுப்பப்படும்.
- பயிர்க்கடன் பெற முக்கிய நிதி நிறுவனங்களை இணைத்தல்
- பயிர் காப்பீடு - பயிரிடப்பட்ட பயிர் மற்றும் பரப்பளவை சரிபார்த்தல்

i. வேளாண்மைத்துறை,
ii. தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறை,
iii. வேளாண் விற்பனை - வேளாண் வணிகத் துறை
iv. விதைச்சான்றளிப்பு – அங்ககச் சான்றளிப்புத் துறை,
v. வேளாண் பொறியியல் துறை,
vi. சர்க்கரைத்துறை,
vii. வருவாய்த்துறை,

viii. பேரிடர் மேலாண்மைத் துறை,

ix. கூட்டுறவுத்துறை,

x. பட்டுவளர்ச்சித்துறை,

xi. உணவு வழங்கல் துறை,

xii. ஊரக வளர்ச்சித் துறை

xiii. கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இதர துறைகள் மூலம் வழங்கப்படும் வேளாண் சார்ந்த அனைத்து சேவைகளையும் ஒன்றிணைத்து வழங்கும் பயன்பாட்டு இயங்குதளமாக GRAINS இயங்குதளம் அமைய உள்ளது. அதோடு, GRAINS இயங்குதளமானது, இறுதிப் பயனாளர்கள் எளிதாக பயன்படுத்தும் வகையில் அமைய உள்ளதால், தங்கள் விவரங்களை எளிதாக சமர்ப்பிக்கவும், அளித்த தகவல்களை மாற்றம் செய்து கொள்ளவும் இயலும். மேலும், GRAINS இயங்குதளத்தினை 2023-24 ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்திட நிதி ஆதாரம் தேவையில்லை எனவும் குறிப்பிட்டு உரிய ஆணை வேண்டி வேளாண்மை இயக்குநர் அரசுக்கு தனது கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

3. மேலும், ஒன்றிய அரசு, மேற்காணும் விவரங்களை ஒன்றிணைத்து, நாடு முழுவதும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தினை வருவாய் - பேரிடர் மேலாண்மைத் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து வேளாண்மை இயக்குநரால் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வேளாண் சார்ந்த அரசின் திட்டப் பலன்களை எளிதில் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த GRAINS வலைதளத்தில் விவசாயிகள் தங்களது அடிப்படைத் தகவல்களை பதிவு செய்திட அறிவுறுத்தி விரிவான பத்திரிக்கைச் செய்தி 21.04.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் GRAINS இயங்கு தளத்தினை உருவாக்கி செயல்படுத்திட நிதி ஆதாரம் தேவையில்லை எனவும் குறிப்பிட்டு வேளாண்மை இயக்குநர், அரசின் ஆணையினை வேண்டியுள்ளார்.

4. வேளாண்மை - உழவர் நலத்துறையின் 2023-2024 - ஆம் வேளாண் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட இவ்வறிவிப்புகள் தொடர்பான வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, மேலே பத்தி இரண்டு மற்றும் மூன்றில் உள்ள வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அனைத்து மாவட்டங்களிலும் பயிர் சாகுபடி

விவரங்களை கிராம வாரியாக சேகரித்து, கணினிமயமாக்கி புதிய இணையதளமான 'GRAINS' Portal (Grower Online Registration of Agriculture Inputs System) என்ற இயங்குதளத்தை 2023-2024 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்திடலாம் என அரசு கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
கூட்டுறவு,உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்த்துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர்/ஆணையர், சர்க்கரைத்துறை, சென்னை-35
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
இயக்குநர்,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
இயக்குநர்,வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை -35.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-32.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.
இயக்குநர், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை, சென்னை-32.

நகல்
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை- உழவர் நலத் துறை, சென்னை-9.
உதிரி/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வ. சசிகுமார் 26/4/2023
பிரிவு அலுவலர்
26/4/23